# ஜம்மு-காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து செல்லும்

## உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு

**புது தில்லி, டிச. 11:** 'ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 370 ரத்து செய்யப்பட்டது செல்லும்' என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு திங்கள்கிழமை தீர்ப்பளித்தது.

மேலும், 'ஜம்மு-காஷ்மீருக்கு விரைந்து மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்' என்று அறிவுறுத்திய உச்சநீதிமன்றம், 'அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் ஜம்மு-காஷ்மீர் பேரவைக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்றும் உத்தரவிட்டது.

அதோடு, ஜம்மு-காஷ்மீரை இரு யூனியன் பிரதேசங்களாக பிரித்த மத்திய அரசின் முடிவின் செல்லத்தக்கத்தன்மையையும் உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.

**சிறப்பு அந்தஸ்து ரத்து:** இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்தது. இந்தச் சட்டப் பிரிவின்படி, பாதுகாப்பு, வெளியுறவுத் துறை, தகவல்தொடர்பு ஆகிய துறைகளைத் தவிர மற்ற துறைகள் தொடர்பாக ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு தாங்களாகவே தனி சட்டத்தை வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

அதனடிப்படையில் ஜம்மு-காஷ்மீர் அரசு தங்களுக்கென தனிச் சட்டத்தை வகுத்துக்கொண்டதோடு, தனிக் கொடியையும் வடிவமைத்துக் கொண்டது. வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த 370-ஆவது பிரிவை மத்திய அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி ரத்து செய்தது. மேலும், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை வழங்கியது. இதில், மூன்றுவிதமான தீர்ப்புகளை நீதிபதிகள் வெளியிட்டனர்.

தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பி.ஆர்.கவாய், சூர்யகாந்த் ஆகியோர் ஒரு தீர்ப்பையும், நீதிபதி எஸ்.கே.கௌல் தனித் தீர்ப்பையும் வழங்கினர். அமர்வில் இடம்பெற்ற நீதிபதி சஞ்சீவ் கன்னா, இரு தீர்ப்புகளிலும் உடன்படுவதாகக் குறிப்பிட்டு, அதற்கான காரணத்தையும் தெரிவித்தார்.

**தற்காலிக நடைமுறை:** தலைமை நீதிபதி சந்திரசூட் தனது தீர்ப்பில் கூறியதாவது: அரசமைப்புச் சட்டத்தின் 370-ஆவது பிரிவு என்பது தற்காலிகமான நடைமுறைதான்.

ஜம்மு-காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை என்பது நிரந்தர அமைப்பு அல்ல. போர்ச் சூழலைக் கட்டுப்படுத்த தற்காலிக ஏற்பாடாக வகுக்கப்பட்டதே சட்டப் பிரிவு 370. இந்தச் சட்டப் பிரிவை ரத்து செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. இதற்காக மாநில அரசின் ஒப்புதலைப் பெற வேண்டிய அவசியம் இல்லை.

மேலும், இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கடந்த 1949-ஆம் ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி அறிவிக்கை செய்த பிறகு, ஜம்மு-காஷ்மீருக்கென தனி இறையாண்மைக் கூறுகள் இருக்க முடியாது. சட்டப் பிரிவு 370 என்பது சமச்சீரற்ற கூட்டாட்சியின் அம்சமே தவிர, இறையாண்மை அல்ல.

அதுமட்டுமின்றி, ஜம்மு-காஷ்மீரின் அரசியல் நிர்ணய சபையின் பதவிக்காலம் 1957-ஆம் ஆண்டில் காலாவதியாகிவிட்டது. எனவே, 370-ஆவது பிரிவை ரத்து செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. அதன்படி, அந்தப் பிரிவை குடியரசுத் தலைவர் ரத்து செய்து வெளியிட்ட அறிவிக்கை செல்லுபடியாகும்.

நாட்டின் பிற மாநிலங்களிலிருந்து வேறுபட்ட இறையாண்மையை ஜம்மு-காஷ்மீர் கொண்டிருக்கவில்லை; அது, இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதான். இதை அரசமைப்புச் சட்டப் பிரிவு 1 மற்றும் 370-ஆவது பிரிவுகள் தெளிவுபடுத்துகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளும் ஜம்மு-காஷ்மீருக்கும் பொருந்தும்.

மேலும், ஜம்மு-காஷ்மீரில் அரசமைப்பின் 356-ஆவது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தியதற்கு உரிய காரணங்கள் உள்ளதால் இதுகுறித்து நீதிமன்றம் கேள்வி எழுப்ப வேண்டியதில்லை.

குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருக்கும்போது, அந்த மாநிலத்தின் மீது மத்திய அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் கேள்வி எழுப்ப முடியாது.

குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது, மாற்ற முடியாத நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க முடியாது என்ற மனுதாரரின் வாதம் நிராகரிக்கப்படுகிறது என்று தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தீர்ப்பில் குறிப்பிட்டார்.



ஜம்மு-காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதற்கு எதிரான வழக்கில் தீர்ப்பளித்த தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு

## விரைவில் மாநில அந்தஸ்து; 2024, செப். 30-க்குள் தேர்தல்

ஜம்மு-காஷ்மீருக்கு விரைவில் மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும்; 2024, செப். 30-க்குள் பேரவைத் தேர்தலை நடத்த வேண்டும் என தலைமை நீதிபதி சந்திரசூட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமை நீதிபதியின் தீர்ப்பு விவரம்: 'தனி யூனியன் பிரதேசமாகப் பிரிக்கப்பட்ட லடாக்கைத் தவிர்த்து, ஜம்மு-காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து அளிக்கப்படும்' என்று சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதத்தின்போது உறுதியளித்துள்ளார்.

அந்த வகையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை சட்டப் பிரிவு 3-இன் கீழ் இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது செல்லத்தக்கதா என்பதைத் தீர்மானிப்பது தேவையில்லை எனக் கருதுகிறோம்.

மேலும், எந்தவொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பகுதியைப் பிரித்து தனி யூனியன் பிரதேசமாக அமைக்க அரசமைப்பு சட்டப் பிரிவு 3(ஏ) அனுமதி அளிக்கிறது. அதன்படி, லடாக்கை தனி யூனியன் பிரதேசமாக பிரித்த மத்திய அரசின் முடிவு செல்லத்தக்கதே.

மறுசீரமைப்புச் சட்டப் பிரிவு 14-இன் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஜம்மு-காஷ்மீர் பேரவைக்கு வரும் 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த தேவையான நடவடிக்கைகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஜம்மு-காஷ்மீருக்கு விரைந்து மாநில அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்' என்று தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.

**மனித உரிமைகள் மீறலை விசாரிக்க ஆணையம்:** நீதிபதி எஸ்.கே.கௌல் அளித்த தீர்ப்பில், 'சட்டப் பிரிவு 370-இன் நோக்கம், ஜம்மு-காஷ்மீரை மற்ற இந்திய மாநிலங்களுக்கு இணையாக மெதுவாகக் கொண்டுவருவதாகும். ஜம்மு-காஷ்மீரில் கடந்த 1980-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க பாரபட்சமற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.



உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது; இது நம்பிக்கையை நிலைநிறுத்துவதோடு வலிமையான, ஒன்றிணைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான சான்று

**—பிரதமர் மோடி**



சட்டப் பிரிவு 370-ஐ நீக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுள்ள முடிவை 2019, ஆகஸ்ட் 5-இல் பிரதமர் நரேந்திர மோடி எடுத்தார். அதன்பிறகு ஜம்மு காஷ்மீரில் அமைதியான சூழல் நிலவுகிறது.

**—மத்திய அமைச்சர் அமித் ஷா**



370-ஆவது சட்டப் பிரிவு எப்படி ரத்து செய்யப்பட்டது என்பது தொடர்பான தீர்ப்பை காங்கிரஸ் கண்ணியத்துடன் நிராகரிக்கிறது.

ஜம்மு-காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற தீர்ப்பை காங்கிரஸ் வரவேற்கிறது.

**—ப.சிதம்பரம்**



ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது சரியானது என்ற உச்சநீதிமன்றம் கூறியுள்ளது மரண தண்டனைக்கு நிகரானது.

**— மெஹபூபா முஃப்தி**



உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றமளிக்கிறது. எனினும், போராட்டம் தொடரும். நாம் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது.

**- ஒமர் அப்துல்லா**

# மத்திய பிரதேசத்தின் புதிய முதல்வர் மோகன் யாதவ்

## சிவராஜ் சிங் செளஹான் ராஜிநாமா

**போபால், டிச. 11:** மத்திய பிரதேச மாநில புதிய முதல்வராக முன்னாள் அமைச்சரும், மூன்று முறை எம்எல்ஏவுமான மோகன் யாதவை (58) பாஜக திங்கள்கிழமை தேர்வு செய்தது. இவர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராவார்.

மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட முதல்வர் தேர்வில், நான்கு முறை முதல்வரான சிவராஜ் சிங் செளஹானுக்கு (64) பதிலாக பாஜக மேலிடம் மோகன் யாதவை தேர்வு செய்துள்ளது.

மத்திய பிரதேசத்தின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த முதல்வர்களாக 2003-இல் இருந்து உமா பாரதி, பாபு லால் கெளர், சிவராஜ் சிங் செளஹானைத் தொடர்ந்து நான்காவது முதல்வராக மோகன் யாதவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

230 தொகுதிகளைக் கொண்ட மத்திய பிரதேச பேரவைக்கு நவ. 17-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பாஜக 163 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது. இந்தத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக யாரையும் பாஜக முன்னிறுத்தவில்லை.

டிச. 3-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியானாலும் முதல்வர் பதவிக்கு கடும் போட்டி நிலவியதால் 10 நாள்களாக முதல்வர் தேர்வில் இழுபறி நீடித்து வந்தது.



மத்திய பிரதேச ஆளுநர் மங்குபாய் படேலை திங்கள்கிழமை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய மோகன் யாதவ். உடன், முன்னாள் முதல்வர் சிவராஜ் சிங் செளஹான் உள்ளிட்டோர்.

இந்நிலையில், போபாலில் திங்கள்கிழமை நடைபெற்ற பாஜக எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் அடுத்த முதல்வராக மோகன் யாதவ் தேர்வு செய்யப்பட்டதாக மாநிலத் தலைவர் வி.டி. சர்மா அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, சிவராஜ் சிங் செளஹான் ஆளுநர் மங்குபாய் படேலை சந்தித்து ராஜிநாமா கடிதத்தை அளித்தார்.

முதல்வர் பதவிக்கான போட்டியில் முன்னணியில் இல்லாத நபராக இருந்த மோகன் யாதவ், ஆர்எஸ்எஸ் அமைப்புடன் நெருங்கிய தொடர்புடையவராகக் கருதப்படுகிறார்.

மேலும், மத்திய பிரதேசத்தின் மொத்த மக்கள்தொகையில் 48 சதவீதம் இதர பிற்படுத்தப்பட்டோர் உள்ளதாலும், மோகன் யாதவின் பெயரை சிவராஜ் சிங் செளஹான் பரிந்துரைத்ததாலும் அவருக்கு முதல்வர் பதவி வழங்கப்பட்டதாக பாஜக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிவராஜ் சிங் செளஹானின் முந்தைய அமைச்சரவையில் உயர் கல்வித் துறை அமைச்சராக மோகன் யாதவ் பதவி வகித்தார்.

உஜ்ஜைன் தெற்கு தொகுதியில் 2013, 2018, 2023 என மூன்று முறை எம்.எல்.ஏ.வாக மோகன் யாதவ் வெற்றி பெற்றார்.

**ஆட்சி அமைக்க உரிமை கோரினார்:** முதல்வர் பதவிக்கு பாஜக எம்எல்ஏக்களால் தேர்வு செய்யப்பட்ட மோகன் யாதவ், ஆளுநர் மங்குபாய் படேலை திங்கள்கிழமை மாலை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

அவருடன் பதவி விலகிய முதல்வர் சிவராஜ் சிங் செளஹான், மாநில பாஜக தலைவர் வி.டி. சர்மா மற்றும் மத்திய பாஜக பார்வையாளர்கள் மூவர் உடனிருந்தனர்.

**2 துணை முதல்வர்கள்:** ராஜேந்தர் சுக்லா, ஜெகதீஷ் தேவ்டா ஆகியோர் துணை முதல்வர்களாகவும், தேர்தலில் போட்டியிட்டு வெற்றிப் பெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பேரவைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்துள்ளார்.

# எண்ணூர் எண்ணெய் கசிவு: பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிபிசிஎல் இழப்பீடு வழங்க வேண்டும்

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்

**சென்னை, டிச. 11:** எண்ணூரர் பக்கிங்காம் கால்வாயில் கச்சா எண்ணெய் கலந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிபிசிஎல் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.



பக்கிங்காம் கால்வாய் வழியாக எண்ணூரர் முகத்துவாரம் பகுதியில் படிந்துள்ள எண்ணெய்க் கழிவுகளால் மாசடைந்து காணப்படும் நீரில் படகோட்டும் மீனவர்கள்.

சென்னை எண்ணூரர் பக்கிங்காம் கால்வாயில் கச்சா எண்ணெய் கலந்து கடல்வரை பரவியதற்கு எண்ணூரரில் உள்ள சிபிசிஎல் நிறுவனமே காரணம் என்று மாசு கட்டுபாடு வாரியம் நடத்திய சோதனையில் உறுதி செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து சிபிசிஎல் நிறுவனத்துக்கு மாசு கட்டுபாடு வாரியம் சார்பில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, பக்கிங்காம் கால்வாயில் உள்ள எண்ணெய் கசிவுகளை கத்தப்படுத்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சிபிசிஎல் நிறுவனத்தில் உள்ள அனைத்து குழாய்கள், தொட்டிகளில் எந்த ஒரு கசிவுகளும் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், தொழிற்சாலையில் இருந்து எண்ணெய் கழிவுகள் மற்றும் மாசுப்பட்ட தண்ணீரை நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை மீறி வெளியேற்றினால் தொழிற்சாலையின் செயல்பாடுகள் முடக்கப்படும்.

தொழிற்சாலை சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்களுக்கு பொறுப்பேற்பதுடன் அதற்கான இழப்பீடுகளை நிறுவனம்தான் வழங்க வேண்டும். பக்கிங்காம் கால்வாயில் எற்பட்ட எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிபிசிஎல் நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டும் உள்பட பல்வேறு வழிகாட்டுதலை மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்கியுள்ளது.

**மறுமதிப்பீடு:** எண்ணூரர் பகுதியில் கச்சா எண்ணெய்க் கழிவு கசிவால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மதிப்பீடு செய்ய அதிகாரிகளுக்கு தமிழக அரசின் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உத்தரவிட்டுள்ளார்.

எண்ணெய்க் கசிவு பேரிடர் மேலாண்மைக் குழுவின் தலைவரும், அரசு தலைமைச் செயலருமான சிவ் தாஸ் மீனா தலைமையில் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது இந்த உத்தரவை அவர் பிறப்பித்தார்.

# வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட தமிழகம் வந்தது மத்தியக் குழு

**சென்னை, டிச. 11:** மழை வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையக் குழு திங்கள்கிழமை இரவு தமிழகம் வந்தது.

மிக்ஜம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் தாழ்வான இடங்களில் வெள்ளம் புகுந்தது. ஆயிரக்கணக்கான வாகனங்களும் தண்ணீரில் மூழ்கி பழுதடைந்தன. பல வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் மின்சாதனப் பொருள்கள் பழுதடைந்தன.

காஞ்சிபுரம்,திருவள்ளூர்மாவட்டங்களில் விளைநிலங்களில் வெள்ளம் தேங்கியதால் வேளாண் பயிர்கள் சேதமடைந்தன.

இந்த நிலையில், மழையால் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிடுவதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் மத்தியக் குழு விமானம் மூலம் திங்கள்கிழமை இரவு 11.40 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தது.

இந்தக் குழுவில் மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அதிகாரிகள் ஏ.கே.சிவஸ்ரீ,பாவ்யா பாண்டே, நிதித்துறை அதிகாரி ரங்கநாத் ஆதம், மின்சாரத் துறையை சேர்ந்த விஜயகுமார், சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அதிகாரி திமன்சிங், உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் இரு பிரிவுகளாகப் பிரிந்துவெள்ளம்பாதித்த 4 மாவட்டங்களுக்குள்பட்ட பகுதினில் செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் பார்வையிட உள்ளனர். அப்போது, மாநில அரசின் அதிகாரிகள், சேத விவரங்களை எடுத்துக்கூறுவார்கள்.

# கடிவாளம் அவசியம்!

தொழில்நுட்பங்களின் வளர்ச்சிதான் மனிதகுல வளர்ச்சிக்கு முதன்மையான காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அதே தொழில்நுட்பம் மனிதகுலத்துக்குப் பெரும் இடையூறாக இருக்கிறது என்பதையும் புறந்தள்ளிவிட முடியாது. நவீன தொழில்நுட்பங்களின் துணையுடன் நடைபெற்றுவரும் 'சைபர் கிரைம்' எனப்படும் இணையவழிக் குற்றங்கள் பெருகி வருவதே இதற்கு எடுத்துக்காட்டு.

இதன் அடுத்தகட்டப் பாய்ச்சலாக உருவெடுத்துள்ள செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் உலகம் இதுவரை எதிர்கொள்ளாத புதுவகையான அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த சாம் ஆல்ட்மேன் என்பவரால் தொடங்கப்பட்ட 'ஓப்பன் ஏஐ' நிறுவனம்தான் 2022, நவம்பரில் சாட் ஜிபிடி என்ற இயங்குதளத்தின் மூலம் செயற்கை நுண்ணறிவு தொடர்பான புரட்சியைத் தொடங்கிவைத்தது.

கூகுள் தேடுபொறிக்கும் சாட் ஜிபிடிக்கும் வித்தியாசம் உள்ளது. கூகுளில் நாம் எதுகுறித்தாவது தெரிந்துகொள்ள வேண்டும் என அதுதொடர்பான வார்த்தைகளைப் பதிவிட்டால் அந்த வார்த்தைக் கேற்ற தகவல்கள் அடங்கிய பல்வேறு இணையதளங்களை கூகுள் காண்பிக்கும். அதே சாட் ஜிபிடியானது நாம் கேட்கும் கேள்விக்கு நேரடியான பதிலைத் தரும். மேலும், மனிதர்களைப் போலவே சிந்தித்து அன்றாட வாழ்க்கையை மிகவும் எளிதாக்கியுள்ள சாட் ஜிபிடியை உலகம் முழுவதும் லட்சக்கணக்கான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

சாட் ஜிபிடி பயன்பாட்டுக்கு வந்த ஓராண்டில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பலமடங்கு வளர்ந்துவிட்டது. இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியில்தான் ஆரம்பிக்கிறது பிரச்னை.

அண்மையில் நடிகை ராஷ்மிகா மந்தனாவின் முகத்தை 'டீப் ஃபேக்' எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் பயன்படுத்தி ஆபாசமாகச் சித்தரித்து வெளியான விடியோ பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவருடன் நிற்காமல் அடுத்தடுத்து சில நடிகைகளை ஆபாசமாகச் சித்தரித்த விடியோக்களும் வெளியாகின.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி யாரையும் யார் போலவும் பேச வைத்தும், நடக்க வைத்தும் விடியோக்களை உருவாக்கலாம் என்பதால் இதனால் உருவாகப் போகும் குழப்பங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கக்கூடும். அதன் விளைவுகளும் கணிக்க முடியாத அளவுக்கு இருக்கும்.

பெரும்பாலும் தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்கிறது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். இதனால் தரவு தனியுரிமைப் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தத் தொழில்நுட்பத்துடன் தவறான தகவல்களை எளிதாகப் பரப்பவும், பொதுக் கருத்தை உருவாக்கவும் முடியும். அளவுக்கு அதிகமாக இந்தத் தொழில்நுட்பத்தை நம்பியிருப்பது படைப்பாற்றல், சிந்தனைத் திறன், மனித உள்ளுணர்வு ஆகியவற்றைக் குறைக்கும். மேலும், வேலையிழப்புமுதல் தனியுரிமை பாதிப்பு வரை செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் பல பாதிப்புகளைத் தொழில்நுட்ப நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கு கடிவாளம் அவசியம் என்பதை குறுகிய காலத்திலேயே உலகம் உணர்ந்துகொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கான விரிவான விதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய கூட்டமைப்பு ஒப்புதல் வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. புரிந்துகொள்ளக்கூடிய, வெளிப்படையான, நியாயமான, பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அடைவதே தங்கள் இலக்கு என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்து, அதிக ஆபத்து, உருவாக்கப்படும் ஆபத்து, குறைந்த ஆபத்து என செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் ஏற்படும் ஆபத்துகளை நான்கு வகையாக ஐரோப்பிய ஒன்றியம் பிரித்துள்ளது. ஓட்டுநர் இன்றி இயங்கும் கார், மருத்துவ தொழில்நுட்பம், விமான இயக்கம் போன்றவை அதிக ஆபத்து பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தினால், அதை அனுமதிப்பதற்கு முன் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படும்.

'டீப் ஃபேக்' விடியோக்கள் ஐரோப்பிய ஒன்றிய விதிகளின்படி குறைந்த ஆபத்து பிரிவில் வருகின்றன. இதில், பயனர்கள் தாங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட செயலியுடன்தான் பேசுகிறோம், மனிதர்களுடன் அல்ல எனத் தெரிந்துகொள்ள வகை செய்யப்பட வேண்டும்.

ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய கவுன்சில் ஆகியவை இந்த வரைவுச் சட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன. ஐரோப்பிய நாடாளுமன்றமும், 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய கவுன்சிலும் இதற்கு அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் முறைப்படி ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு உறுப்பு நாடுகள் இதை தங்கள் நாட்டுச் சட்டமாக மாற்ற இரண்டு ஆண்டுகள் ஆகும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அச்சுறுத்தல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் 'செயற்கை நுண்ணறிவு உரிமைகள் மசோதா' தொடர்பான ஷரத்துகளை அமெரிக்கா தயாரித்துள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்திலும் இது விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. செயற்கை நுண்ணறிவு ஒழுங்குமுறை மசோதா பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த நவம்பரிலேயே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

இந்தியாவும் இதுதொடர்பாக ஆலோசித்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தவறான பயன்பாடுகளைத் தடுக்க இந்திய அரசுடன் இணைந்து செயல்பட கூகுள் அண்மையில் உறுதியளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதன்படி, கூகுளின் யூடியூப் தளத்தில் பதிவிடப்படும் காணொலியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு இருந்தால் அது தொடர்பான தகவலை காணொலி முகப்பில் வெளியிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# திட்டமிட்டு செயல்பட வேண்டும்

வெ. வைகுந்த் ஐ.பி.எஸ்.

எந்த இயற்கைச் சீற்றத்தையும் திட்டமிட்டு எதிர்கொண்டு சமாளிக்க முடியும் என்பதே நான் அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை. எதிர்பாராமல் வரும் வெள்ளத்தையோ புயலையோ நம்மால் தடுக்க முடியாது. ஆனால், இயற்கையின் சீற்றத்தை முன்கூட்டியே கணிக்கும் அளவுக்கு இன்று தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது.

வழக்கமாக, வடகிழக்குப் பருவமழை ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை பொழியும். ஒரு சில ஆண்டுகளில் மறு ஆண்டு பிப்ரவரி மாதம் வரை நீடிக்கலாம். 1978 – 80-இல் ஐ.நா. சபையில் புயலை எதிர்கொள்ளும் பிரிவில் ஆலோசகராக இருந்த வைத்தியா என்பவரிடம் நாங்கள் ஆலோசனை கேட்டபோது, அவர் 'இது வரையிலும் புயலையோ வெள்ளத்தையோ விஞ்ஞானபூர்வமாகத் தடுத்து நிறுத்த ஒரு வித கண்டுபிடிப்பும் இல்லை. ஆயினும் நாம் வானிலை ஆய்வு மையத்தின் துணையுடன் எந்தெந்த இடத்தில் புயலையோ வெள்ளத்தையோ நாம் எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிந்து கொள்ளலாம். அதற்கேற்றவாறு நாம் நம்மை தயார் நிலையில் வைத்திருக்கலாம்' என்று கூறினார்.

புயலோ அல்லது வெள்ளத்தையோ நான் எதிர்கொள்ள வேண்டிய நிலை 1978 – 79-ஆம் ஆண்டுகளில் நான் திருச்சி சரக காவல் துறையின் உயர் அதிகாரியாக இருந்தபோது ஏற்பட்டது. அந்த வகையில் நாகப்பட்டினத்தில் புயல் வீசி 26 நபர்கள் இறந்துவிட்டார்கள். திருச்சியில் வரலாறு காணாத மாபெரும் வெள்ளம் ஏற்பட்டது. ஒரு பக்கம் காவிரியில் வெள்ளம் , மற்றொரு பக்கம் கொள்ளிடத்தில் வெள்ளம் என்ற நிலையில் ஸ்ரீரங்கம் மிதந்து கொண்டிருந்தது என்று சொல்லலாம்.

அந்த நிலையைச் சமாளித்து ஒருங்கிணைந்த குழுக்களை அமைத்து நாங்கள் ஏறக்குறைய 300 நபர்களைக் காப்பாற்றினோம். இதற்காக நான் அந்தச் சரகத்தில் உள்ள 11 காவல் துறை அதிகாரிகளுக்கு மதிப்பிற்குரிய அன்றைய பிரதமர் பெயரில் உள்ள உயிர்காத்த பதக்கங்களை வாங்கித் தந்தேன். இதில் ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்து அதை சமாளித்து வெற்றி பெற்றேன்.

நான் பதக்கத்துக்காகப் பரிந்துரைத்த காவல் துறை அதிகாரிகளில் திருச்சி நகர உதவி துணைக் கண்காணிப்பாளராக மறைந்த பாண்டியனும் இடம்பெற்றார். அவர் ஆற்றிய பணி மெச்சத்தகுந்தது. ஒரு நிறைமாத கர்ப்பிணியை அவருடைய வீடு வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் தன்னந்தனியாகத் தூக்கி மருத்துவமனையில் சேர்த்தார். அவருக்குப் பதக்கம் கொடுப்பதில் ஓர் அரசியல் சாயம் பூசப்பட்டது. அவர் அமைச்சர் துரைமுருகனின் உறவினர் என்ற காரணத்துக்காக அப்போது இருந்த காவல் தலைமை ஒத்துக்கொள்ளவில்லை. இதன் காரணமாக நான் எம்ஜிஆருடன் வாதாடி, பதக்கம் என்பது தனிப்பட்ட அடிப்படையில் அல்ல, அவருடைய மெச்சத்தகு பணிக்காகக் கொடுக்கப்படும் அங்கீகாரம் என்று சொல்லி மறைந்த பாண்டியனுக்குப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தேன்.

அப்போதைய முதல்வர் எம்ஜிஆர் என்னுடைய பணியைப் பாராட்டும் வகையில் என்னை மறைந்த ஆர்.நடராசன் ஐ.ஏ.எஸ். தலைமையில் ஏற்படுத்திய ஒரு குழுவின் செயலராக நியமித்தார். நாங்கள் தமிழ்நாட்டின் வெள்ளத் தடுப்பு ஆணையத்தை ஏற்படுத்தி வெள்ளம் மற்றும் புயலை எதிர்கொண்டு சமாளிக்க வழிமுறைகளை வகுத்தோம்.

இதைப் பற்றிய ஒரு தொகுப்பை 1982-இல் நான் எழுதினேன். வெள்ளம் மற்றும் புயலை சமாளிப்பதற்கு காவல் துறை தகவல் தொடர்புகளை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தி அவற்றை நல்ல முறையில் பணியாற்ற வழிவகைகளை ஏற்படுத்தினேன்.

அந்த வகையில் 1979-இல் நான் குடிமைப் பணி பாதுகாப்புப் பணியில் இயக்குநராகப் பணியாற்றியபோது 1979-இல் வெள்ளம் மற்றும் புயல் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்தி, அதை எம்ஜிஆர் திறந்துவைத்தார். அப்போது அவர் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியருடன் தொடர்புகொண்டு மண்டபத்தில் நிலவும் வெள்ளச் சூழ்நிலை பற்றித் தெரிந்துகொண்டார்.

இந்தப் பணிக்காக எனக்கு 1983-இல் குடிமைப் பாதுகாப்புத் திட்டத்தை தமிழ்நாட்டில் மெச்சத்தகுந்த முறையில் செயல்படுத்தியதற்காக குடியரசுத் தலைவர் பதக்கத்தை எம்ஜிஆர் பெற்றுத் தந்தார். இதையெல்லாம் தொகுத்துப் பார்ப்பதில் நமக்கு ஒரு உண்மை தெளிவாகப் புரிகிறது.

நாம் வெள்ளத்தையோ புயலையோ தடுக்க முடியாது. வானிலை ஆய்வு நிலையத்தின் கணிப்புப்படி எங்கெல்லாம் புயல் மற்றும் வெள்ளம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நாம் தயார் நிலையில் இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் – இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக நாம் பார்த்தால் கீழ்க்கண்ட உண்மைகள் நமக்கு தெளிவாகப் புலப்படுகின்றன.

1.வெள்ளம் மற்றும் புயலை சமாளிப்பதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் முதல் ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. இதில் முக்கியமான பணி என்னவென்றால் சாலைகளையும், புதை சாக்கடை நிலையையும் முன்கூட்டியே தெரிந்துகொண்டு அதற்குரிய பராமரிப்புப் பணிகளை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. இதில் குறிப்பிடத்தக்க ஓர் உண்மை என்னவென்றால் சென்னையில் உள்ள புதை சாக்கடை முறை சென்னை மாநகர பதிவேட்டின்படி 1895-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதன்பிறகு அந்தத் திட்டம் சரியாக – முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது.

4. குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது.

5.சாலைகளைப் பொறுத்தமட்டில் அவற்றின் அமைப்பிலோ பராமரிப்பிலோ தனிப்பட்ட ஒப்பந்த முறையை நிறுத்த வேண்டும். அதற்குப் பதிலாக அரசே தம்முடைய ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைத்து நேரடியாக அத்துறையின் இயக்குநரால் முறையாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

6. இந்த வெள்ளம் மற்றும் புயலை சமாளிக்கும் வகையில் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதாவும் என்னை சிங்கப்பூர் அனுப்பிவைத்தனர். அங்குள்ள சாலை பராமரிப்பு முறைகளைக் கண்டு வியந்து போனேன்.

சாலைகள் எல்லாம் நடுவில் உயர்ந்து மேலோங்கிய நிலையில் இருக்கும். சாலையின் இரண்டு பக்கங்களிலும் சாய்வு நிலையில் இருக்கும். அதன் காரணமாக மழை பெய்தால் சரிந்த நிலைகளின் பக்கங்களின் வழியாக நேரடியாக அங்குள்ள கழிவுநீர் கால்வாயில் போய் சேர்ந்துவிடும். இதனால் சாலைகளில் தண்ணீர் தேக்கமே இருக்காது. அந்த நிலை நம் தமிழ்நாட்டில் வர வேண்டும்.

EVA STALIN IAS

# அனைவருக்கும் ஆரோக்கியம்!

வீடுகுந்து கெடுப்பதும் வசிப்பவர்க்குத் தொற்றுநோய்கள் கொடுப்பதும் எல்லாம் மழை என்று எவரேனும் புதுக்குரல் எழுப்பக்கூடும். காரணம், 'வெள்ளம் வரும் முன்னே; தொற்று நோய்களின் பரவலாம் பின்னே' என்றுதான் கவனம் கொள்ள வேண்டி உள்ளது.

டைபாய்டு காய்ச்சல், காலரா, மஞ்சள் காமாலை (ஹெப்படைடிஸ்-ஏ) போன்ற நீர் மூலம் பரவும் நோய்கள்; மலேரியா, டெங்கு, டெங்கு ரத்தக் கசிவு காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் போன்று பூச்சிகளாலும், விலங்குகளாலும் பரவும் நோய்கள் என்று அனைத்தையும் எதிர்கொள்ள நேரும்.

முன்னொரு காலத்தில் ஏரிகள் செறிந்து இருந்த சமப்பரப்பான சென்னை போன்ற பெரு நகரங்களில் வெள்ளக் காலங்களில் குடியிருப்புகளுக்குள் மழைநீர் அழையா விருந்தாளியாகப் புகுந்து நாசம் செய்வது இயல்பாகிவிட்டது. மழைநீருக்கு என்ன தெரியும், தங்கள் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்தவர்களின் புலம்பல்?

ஏரித் திட்டம் என்றே குடியிருப்புகள் எழுப்பப்படும்போது, இத்தகைய கட்டுமானப் பணிகளால் மக்களின் உடல் நலத்திற்கும் பாதிப்புகள் உண்டு. மண், சிமென்ட் போன்றவற்றின் கண்ணுக்குப் புலப்படாத தூசிவெளி, ஒரு விதத்தில் 'மாய நோய்க்காரணி' ஆகிறது.

அதிலும் முடியின் தடிமனில் சராசரி 40-இல் ஒரு பங்கு அளவு- அதாவது 2.5 மைக்ரோமீட்டர் தூசி, அபாயகரமானது (ஒரு மைக்ரோமீட்டர் என்பது ஒரு மீட்டரின் 10 லட்சத்தில் ஒரு பங்கு). இது ரத்தத்தில் குளுக்கோஸ் அளவை அதிகரிக்கச் செய்வதுடன், குளுக்கோஸ் பிணைந்த ரத்தச் சிவப்பணுக்களின் 3 மாதகால சராசரி நீரிழிவுக் குறியீட்டிலும் பாதிப்பைப் பதிவாக்குகிறதாம்.

பிரிட்டிஷ், 'திறந்தநிலை நீரிழிவுநோய் ஆராய்ச்சி மற்றும் பராமரிப்பு மையத்தின் மருத்துவ இதழில் (2023 தொகுதி 11:5) வெளியான '2.5 தூசுவெளி உட்படுதலும், குளுக்கோஸ் குறிப்பான்களும், இருபெரும் இந்திய நகரங்களில் 2-ஆம் வகை நீரிழிவு நோய்ப் பரவலும்' என்னும் ஆய்வுக் கட்டுரை தரும் அதிர்ச்சித் தகவல் இது. அந்த இருபெரும் நகரங்கள் புதுதில்லியும், சென்னையும்தான்.

எப்படியோ, உலகளாவிய நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையில் சீனாவுக்கு அடுத்த இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது. நம் நாட்டில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 7.7 கோடி பேர் என்றாலும், இவர்களில் 1.2 கோடி பேர் 65 வயதைத் தாண்டிய பெரியவர்களாம். இந்த எண்ணிக்கை 2045-ஆம் ஆண்டில் மேலும் பல கோடிகள் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க்கான சிகிச்சை என்பது வெறுமனே உணவுப் பழக்கம் சார்ந்தது மட்டுமல்ல. உடற்பயிற்சியும் மூச்சுப் பயிற்சியும் போலவும் அவசியம் என்று கற்பித்து வருகிறோம். மனதை ஒருமுகப்படுத்தும் தியானமும் உபதேசித்து வருகிறோம். அத்தனைக்கும் சவால் விடும் வகையில் நம் வசிப்பிடங்களின் காற்று மாசு வருங்காலத்தில் அதீத கவனம் பெறும்.



நெல்லை சு. முத்து

'மெட்ராஸ் நீரிழிவு நோய் ஆராய்ச்சி அறக்கட்டளை (சென்னை), புதுதில்லியில் உள்ள 'நாள்பட்ட நோய்க்கான கட்டுப்பாட்டு மையம்', 'பொது சுகாதார அறக்கட்டளை', 'அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் உட்சுரப்பியல் துறை' ஆகியவற்றுடன், அமெரிக்காவில் ஹார்வர்டு டி.எச் சான் பொது சுகாதாரப் பள்ளி (மாசாசூசெட்ஸ்), எமோரி பல்கலைக்கழகத்தின் ரோலின்ஸ் பொது சுகாதாரப் பள்ளி (அட்லாண்டா) ஆகிய ஆய்வகங்களில் இருந்து- மருத்துவர் சித்தார்த்த மண்டல் தலைமையில் சுகந்தி ஜெகநாதன், டிம்பிள் கொண்டல், ஜோயல் டிஸ்வார்ட்ஸ், நிகில் டாண்டன், விஸ்வநாதன் மோகன், துரைராஜ் பிரபாகரன், கே.எம்.வெங்கட் நாராயணன் ஆகியோர் நடத்திய ஆய்வு முடிவுகள் இவை.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் 50 வயதுப் பெண்டிர்களில் சென்னையில் 50% பேரும், புதுதில்லியில் 44 வயது உடைய 50% பேரும் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனராம்.

**உலகளாவிய நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையில் சீனாவுக்கு அடுத்த இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது. நம் நாட்டில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 7.7 கோடி பேர். இந்த எண்ணிக்கை 2045-ஆம் ஆண்டில் மேலும் பல கோடிகள் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.**

ஒரு கன மீட்டருக்கு 10 மைக்ரோகிராம் அளவுத் தூசு பொருள்களால் மாசுபட்ட காற்றை சுவாசித்து வாழ்ந்தால், நீண்டகால அளவில், இரண்டாம் வகை நீரிழிவு நோயை உருவாக்கும் அபாயம் 23% அதிகரித்திருப்பதை இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

உண்மையில் 2006-ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்த வழிகாட்டுதல்களின்படி, ஒருநாளில் 2.5 மைக்ரோன் தூசிவெளியில் கனமீட்டருக்கு 5 மைக்ரோகிராம் வரை சகித்துக்கொள்ளலாம் என்றும், 10 மைக்ரோன் தூசிவெளியில் 15 மைக்ரோகிராம் அளவு இருக்கலாம் என்றும் பரிந்துரைத்தன.

ஆனால், இந்தியாவில் சுற்றுப்புறக் காற்றின் தரநிலைகள் தளர்த்தப்பட்டதால், 2.5 மைக்ரோமீட்டர் தூசிவெளியில் கனமீட்டருக்கு 10 மைக்ரோகிராம் வரை ஏற்றுக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டது.

சென்னையில் இந்திய தேசியத் தரக் கட்டுப்பாட்டு அளவுகள் நெகிழ்த்தப்பட்டு, 2.5 மைக்ரோமீட்டர் தூசுகளின் செறிவு நான்கு மடங்கு கூடுதல் மாசாக அளவை ஏற்றுக்கொண்டதாக அமைந்துவிட்டது. புதுதில்லியின் செறிவு உலக சுகாதார நிறுவனம் கட்டிய அளவைவிட 10 மடங்கு கூடுதலாகவே இருந்ததாம்.

மனித உடலில் உள்ள சுமார் 5 லிட்டர் கொள்ளளவு உடைய பஞ்சு நுரை போன்ற நுரையீரலில் நிமிடத்திற்கு சராசரி 7 அல்லது 8 லிட்டர் காற்றை உள்ளிழுத்து வெளியேற்றுகிறோம். மூச்சுக் காற்றில் 20% ஆக்சிஜன் இருந்தாலும், அதில் ஏறத்தாழ 5% ஆக்சிஜன் மட்டுமே உடல் செல்களால் உட்கொள்ளப்படுகிறது. அதனால் ஒரு நிமிடத்திற்கு ஏறத்தாழ 400 மில்லி லிட்டர் தூய ஆக்சிஜனை எடுத்துக்கொள்கிறோம்.

அத்துடன் மற்றொரு பிரச்னையாக, கரோனா நோயிலிருந்து மீண்டுவரும் நோயாளிகள் சிலர் நுரையீரல் தொடர்பான பல்வேறு சிக்கல்களை அனுபவிக்கின்றனராம். இவர்களுக்கு சுவாசிப்பதில் சிரமம், மூச்சுத் திணறல் போன்ற நுரையீரல் செயலிழப்புகள் தொடர்கின்றன.

'கரோனா நுண்மி, பல நோயாளிகளிடம் ரத்த உறைதல் செயல்பாட்டை அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன' என்று 'பிரிகாம் - பெண்கள் மருத்துவமனை' (ஹார்வர்டு பொது சுகாதாரப் பள்ளி) மருத்துவர் காளிஸ் கூறுகிறார். நுரையீரலிலும், இதயத்திலும் உள்ள சிறிய ரத்தநாளங்களிலும், பெரிய நுரையீரல் தமனிகளிலும், கால்களில் உள்ள பெரிய நரம்புகளிலும் தோன்றும் ரத்தக் கட்டிகள் நுரையீரலில் வடுக்கள் ஏற்பட வழிவகுக்குமாம்.

கருவிழியில் பூ விழுதல் போலவும், அம்மை நோய்த் தழும்பு போலவும், நுரையீரலில் நுண்மித் தழும்புகள் சிலருக்கேனும் இருக்கிறதாம். இதன் பாதிப்பு, சாதாரண நடைமுறை வாழ்வில் பெரிதாக வெளிப்படாது. ஆனால், அவரவர் உணவுப் பழக்கம், மது, புகை போன்ற தீய பழக்கங்கள், கூடுதலான கடின உடல் உழைப்பு, நோயெதிர்ப்பு இன்மை, வயது, பாலின வேறுபாடுகள் போன்ற பல்வேறு காரணங்களுக்கேற்ப நுரையீரலின் பாதிப்பு நபருக்கு நபர் மாறுபடும். உள்மூச்சில் ஆக்சிஜன் குறைந்தால், கூடுதல் மூச்சு இழுத்து உள்வாங்க நேரும்.

நுரையீரல் பெற்றுக்கொண்ட ஆக்சிஜனை மனித செல்களுக்குக் கொண்டு செல்ல, ரத்தத்தில் 'ஹீமோகுளோபின்' என்னும் இரும்புச்சத்து சிவப்பணுக்கள் உதவுகின்றன. ஒரு மில்லி லிட்டர் ரத்தத்தில் ஹீமோகுளோபின், ஆண்களுக்கு சராசரி 160 மில்லி கிராமும், பெண்களுக்கு 140 மில்லி கிராமும் அவசியம்.

இதில் பற்றாக்குறை எழுந்தால், உறிஞ்சிய பிராணவாயுப் பொட்டலங்களை செல்களுக்கு விநியோகம் செய்வதில் தடுமாற்றம் உண்டாகும். கூடுதல் ஆக்சிஜன் வேண்டும் போது ரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

ரத்த அழுத்தத்தால் இதயத்துக்கு பணிப்பளு கூடுதல் ஆகும். ஏற்கெனவே மனித உடலின் 5.6 லிட்டர் ரத்தம் உடல் முழுவதும் ஒரு நாளில் மொத்தம் 19,000 கி.மீ. பயணிக்கிறது. செல்களின் அவசரப் பணிகளால் கூடுதல் கழிவுகளும் வெளியேற்றப்படும். அத்தனை அழுக்குகளையும் சிறுநீரகங்கள் வடிகட்டி வெளியேற்ற மிகவும் சிரமப்படும். அதுவும் பழுதானால் சொல்லவே வேண்டாம்.

அதனால் இரும்புச் சத்துணவுக்குக் கீரை, தோல் உரிக்கப்படாத உருளைக்கிழங்கு, தக்காளி, பீன்ஸ் வகைகள், பட்டாணி, முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு எனப் பல உணவுப் பதார்த்தங்கள் தேவை.

அதிலும் ரத்த ஓட்டத்தைச் சீராக்கவும், ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் காக்கவும் சின்ன வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் உதவும். இவை 'புரோப்பீன் சிஸ்டெய்ன் சல்பாக்சைடு' மருத்துவ குணம் உடையது.

உலகளாவிய இந்த ஆரோக்கிய பயணத்தில் 2012 டிசம்பர் 12 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை - ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 12 அன்று சர்வதேச உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு (யுனிவர்சல் ஹெல்த் கவரேஜ்) நாளாக அறிவித்தது. இந்த ஆண்டின் முக்கியக் கோட்பாடு- 'அனைவருக்கும் ஆரோக்கியம்: செயலுக்கான நேரம்'.

இத்தனைக்கும் மத்தியில் புதிய 'கண்டறியப்படாத நிமோனியா'வால் குழந்தைகளிடையே சுவாச நோய்கள் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக சீனா அண்மையில் பீதியைக் கிளப்பி உள்ளது. அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பின்படி, 2023, டிசம்பர் 1 முதல் 2024, நவம்பர் 30 வரை பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து சாதாரணக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விசா இல்லாத பயணத்தை சீனா வழங்குகிறதாம்.

இலவச நோய் கொடுத்தாலும் வாங்கிவர எந்த நாட்டுக்கும் செல்ல நாம் தயங்குவது இல்லையே. புதிய நுண்மிகளை இவர்கள் நம் நாட்டுக்குக் கடத்தாமல் இருந்தால் சரி.

**இன்று (டிச. 12) சர்வதேச சுகாதாரப் பாதுகாப்பு நாள்.**

கட்டுரையாளர்:
**இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு).**

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நெதர்லாந்து 5-ஆவது முறையாக சாம்பியன்





சிறந்த வீராங்கனை
**தெரெசா விமா**
ஸ்பெயின்

அதிக கோலகள்
**ஆஸ்ட்ரிட் பொனாமி**
பெல்ஜியம் — 11

சிறந்த கோல்கீப்பர்
**மெர்சிடஸ் அர்போலா**
(ஆர்ஜென்டினா)

**CHAMPIONS 2023**

**சான்டியாகோ, டிச. 11:** சிலியில் நடைபெற்ற 13-ஆவது ஜூனியர் மகளிர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தி நெதர்லாந்து சாம்பியன் கோப்பையை தக்கவைத்துக் கொண்டது.

அந்த அணி சாம்பியனாவது இது 5-ஆவது முறையாகும் (1997, 2009, 2013, 2022, 2023). போட்டியின் வரலாற்றில் வேறெந்த அணியும் இத்தனை முறை சாம்பியன் பட்டம் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்ஜென்டினா 4-ஆவது முறையாக வெள்ளியும், பெல்ஜியம் முதல் முறையாக வெண்கலமும் வென்றன.

சான்டியாகோ நகரில் திங்கள்கிழமை நடைபெற்ற நெதர்லாந்து - ஆர்ஜென்டினா இறுதி ஆட்டம் முதலில் 2-2 கோல் கணக்கில் டிரா ஆக, வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்டி ஷூட் அவுட் வாய்ப்பில் நெதர்லாந்து 4-1 கோல் கணக்கில் வென்றது.

முன்னதாக விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், முதலில் ஆர்ஜென்டினாவே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 20-ஆவது நிமிஷத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பில் அந்த அணியின் ஜோடியான் கோலடித்து ஆர்ஜென்டினாவின் கணக்கை தொடங்கினார்.

தொடர்ந்து 29-ஆவது நிமிஷத்தில் கிடைத்த மற்றொரு பெனால்டி கார்னர் வாய்ப்பில் வலென்டினா ரபோசோ ஸ்கோர் செய்ய, ஆர்ஜென்டினா 2-0 என்ற முன்னிலையுடன் முதல் பாதி ஆட்டத்தை நிறைவு செய்தது. எனினும், 2-ஆவது பாதியில் நெதர்லாந்து தனது ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தியது.



FIH HOCKEY WOMEN'S JUNIOR WORLD CUP CHILE 2023

அதன் பலனாக 35-ஆவது நிமிஷத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பில் அந்த அணி வீராங்கனை மிக்கி ராபர்ட்ஸ் கோலடித்தார். இதனால் சுதாரித்துக்கொண்ட ஆர்ஜென்டினா, மேலும் கோல் வாய்ப்புகள் வழங்காமல் மிக்க கவனமாக விளையாடத் தொடங்கியது.

ஆனாலும், விட்டுக் கொடுக்காத நெதர்லாந்து, ஆர்ஜென்டினாவின் தடுப்பாட்டத்தை துளைத்து 57-ஆவது நிமிஷத்தில் 2-ஆவது கோல் ஸ்கோர் செய்தது. அப்போது கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பிலும் மிக்கி ராபர்ட்ஸே கோலடித்தார். இதனால் ஆட்டம் 2-2 என சமனாகி மேலும் விறுவிறுப்பாக, எஞ்சிய நேரத்தின் போராட்டத்தில் இரு அணிகளின் கோல் முயற்சிகளுக்குமே பலன் கிடைக்காமல் போனது.

நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் ஆட்டம் இவ்வாறு டிராவில் முடிந்ததால், பெனால்டி ஷூட் அவுட் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதில் நெதர்லாந்துக்காக ஜிப்டிக்கி, எலின் யான்சென், கஸ்ஜே மோல், வெட் வின்டர் ஆகியோர் கோலடிக்க, ஆர்ஜென்டினாவுக்காக சோல் பகேலா மட்டும் ஸ்கோர் செய்தார். இதனால் நெதர்லாந்து 4-1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**பெல்ஜியம் 3-ஆம் இடம்:** போட்டியில் 3-ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் பெல்ஜியம் 7-0 கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

5-ஆவது இடத்துக்கான மோதலில் ஆஸ்திரேலியா - ஜெர்மனியையும் (2-0), 7-ஆவது இடத்துக்கான மோதலில் ஜப்பான் - ஸ்பெயினையும் (4-2) சாய்த்தன.



FIH HOCKEY MEN'S JUNIOR WORLD CUP MALAYSIA 2023

## இந்தியா – நெதர்லாந்து காலிறுதியில் இன்று மோதல்

மலேசியாவில் நடைபெறும் ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா தனது காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்துடன் செவ்வாய்க்கிழமை மோதுகிறது.

குரூப் சுற்றில் முதலில் தென் கொரியாவை வீழ்த்தி, பின்னர் ஸ்பெயினிடம் வீழ்ந்த இந்தியா, கடைசி ஆட்டத்தில் கனடாவை வென்று காலிறுதியில் இடம் பிடித்திருக்கிறது. 2 வெற்றி, 1 டிராவுடன் குரூப் 'டி'-யில் முதலிடம் பிடித்து காலிறுதிக்கு வந்திருக்கும் நெதர்லாந்திடமிருந்து இந்தியாவுக்கு சவால் காத்திருக்கிறது.

நெதர்லாந்தின் படையெடுக்கும் கோல் முயற்சிகளை தடுக்கும் வகையில் தடுப்பாட்டத்தை உறுதி செய்வதும், நெருக்கடியான தருணங்களில் தேவையின்றி பெனால்டி கார்னர் வாய்ப்புகள் விட்டுத்தருவதை தடுப்பதும் இந்தியாவுக்கான முக்கிய உத்திகளாக இருக்கும்.

இதர காலிறுதி ஆட்டங்களில் ஆர்ஜென்டினா – ஜெர்மனி, பிரான்ஸ் – ஆஸ்திரேலியா, ஸ்பெயின் – பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.